2026 பிப்ரவரி மாதம் 24– ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 108/2020

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24– ஆம் தேதி செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.3–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – செந்தில் |
| தந்தை பெயர்: | ராஜ் |
| ஊர்: | வடபுதுப்பட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | Office Assistant |
| வயது : | 47 |

24.02.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

1. நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் சம்மத உடன்படிக்கை பத்திரமான வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

**2, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

2. வாதியை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் சிறுவயது முதல் பழக்கம். நான் ஆவணம் எழுதும் பத்திர அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அடிக்கடி சாட்சி கையொப்பம் செய்வேன் என்றாலும், அதற்காக நீதிமன்றத்தில் அடிக்கடி சாட்சியம் அளிப்பதற்காக வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல, இது தான் முதல்முறையாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். வாதியும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 19.12.2018ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் கடனிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை குறைவான தொகைக்கு கிரையம் பேசியதால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பேசியதாக நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. ரூ.25 லட்சம் தொகையை வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த விபரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ரூ.25 லட்சம் தொகையை கொடுப்பதற்கு வருமானம் இல்லை என்றாலும், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்மத உறுதிமொழி பத்திரம் வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்படும்போது அந்த பத்திரத்தில் இருதரப்பினரும் கையொப்பம் செய்யப்பட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அது 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததால் அவர் மட்டும் கையொப்பம் செய்தால் போதுமானதாகும். உறுதிமொழி பத்திரத்தில் உறுதிக் கொடுப்பவரும், ஏற்பவரும் சட்டப்படி கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.3 பத்திரம் 26.01.2020ம் தேதி வாங்கப்பட்ட ரூ.20 பத்திரம் சுமார் 10 நாட்கள் பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வேலை பார்க்கும் பத்திர அலுவலகத்தில் இருந்த பத்திரத்தை வைத்து வாதிக்காக பின்னிட்டு வா.சா.ஆ.3 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வாதி 1ம்

பிரதிவாதிக்கு கொடுத்த கடன் ரூ.15 லட்சம் என்றாலும், அதில் ரூ.7 லட்சத்தை திருப்பிக்கொடுத்துவிட்டார் என்றாலும், மீதமுள்ள ரூ.8 லட்சம் தொகை தான் கொடுக்க வேண்டும் என்றாலும், நிரூபணவாக்குமூலத்தில் ரூ.18 லட்சமாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

5. கிரையம் பேசிக்கொள்ளும்போது கிரையம் அதிகபட்சமாக 6 மாதங்களுக்குள் போடப்படும் என்றால் சரியல்ல, தொகையை பொறுத்து கால அவகாசம் மாறுபடும். வா.சா.ஆ.3 ஆவணப்படி 12.02.2020ம் தேதிக்குள் மீதிக் கிரைய தொகையை கொடுக்க வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான்.1ம் பிரதிவாதி வாதிக்கு கொடுக்க வேண்டி இருந்த மீதி கடன் தொகையை மார்ச் 2020ம் தேதிக்குள் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. வாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து கொடுத்த கடன் தொகை முழுவதையும் வசூல் செய்துவிட்டு வாதி 1ம் பிரதிவாதியின் குடும்பத்தாரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் நெருங்கிய நண்பர் என்பதாலும், பத்திர அலுவலகத்தில் வேலை செய்வதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்போது நடக்காத விசயங்களை நடந்ததாக கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.02.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.24 17:16:54 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.

24.02.2026.